


புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ பிப்ரவரி. 23, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 139 ❖ ரூ.5

வெற்றி பெற்றவர்கள் மக்களுக்காக செயல்படவேண்டும் - முதல்வர் மு.க.ஸ்டாலின்

# திராவிட மாடல்

## தி.மு.க தலைமையிலான கூட்டணி 21 மாநகராட்சிகளையும் கைப்பற்றியுள்ளது. மேலும் 88 சதவீதத்துக்கு கூடுதலான நகராட்சிகள், பேரூராட்சிகளையும் கைப்பற்றியுள்ளது.



சென்னை, பிப். 23:

தமிழகத்தில் கடந்த 19-ம் தேதி நடைபெற்ற உள்ளாட்சித்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. இது வரையில், வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளில் தி.மு.க கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது. தி.மு.க தலைமையிலான கூட்டணி 21 மாநகராட்சிகளையும் கைப்பற்றியுள்ளது. மேலும் 88 சதவீதத்துக்கு கூடுதலான நகராட்சிகள், பேரூராட்சிகளையும் கைப்பற்றியுள்ளது.

இந்தநிலையில், தி.மு.க தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், 'நடைபெற்று முடிந்த நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. வெற்றியைத் தந்துள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களிடம் நான் ஒரே ஒரு கோரிக்கைதான் வைத்தேன். தி.மு.க கூட்டணிக்கு முழு வெற்றியைத் தாருங்கள். முழு வெற்றியை மதச்சார்பற்ற கூட்டணிக்கு தமிழக மக்கள் வழங்கியுள்ளனர். 9 மாத ஆட்சிக்கு மக்கள் வழங்கிய நற்சான்றிதழாக நான் இதைப் பார்க்கிறேன்.

தி.மு.க மாடல் ஆட்சிக்கு மக்கள் தந்திருக்கும் அங்கீகாரம் இது. தி.மு.க ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவார்கள் என்று மக்கள் நம்பியுள்ளார்கள். இந்த வெற்றியைக் கண்டு நான் கர்வம் கொள்ளவில்லை. மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியைத்தான் நான் கொண்டுள்ளேன்.

வெற்றி பெற்ற அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து கொள்கிறேன். மக்களுக்கு உண்மையாக இருக்கவேண்டும். மக்களின் அடிப்படை பிரச்னைகளை உடனுக்குடன் தீர்த்துவைக்க வேண்டும். மக்கள் உங்கள் மீது புகார் கூறாத அளவுக்கு நீங்கள் செயல்பட வேண்டும். உங்களை நான் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருப்பேன். வெற்றியை ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டாம். அமைதியாக கொண்டாட வேண்டும். மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

சட்டமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்ற பிறகு கருணாநிதியின் நினைவிடத்துக்குச் சென்றேன். அப்போது, எங்களுக்கு வாக்களிக்காதவர்களும் வருத்தப்படும் அளவுக்கு செயல்படுவேன் என்று சட்டமன்றத் தேர்தல் வெற்றியின்போது கூறியிருந்தேன். அந்த அடிப்படையில்தான் செயல்படுகிறேன். அதனால், அ.தி.மு.கவின் கோட்டை என்று சொல்லப்படுகின்ற கொங்கு மண்டலத்திலும் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளோம். கொரோனா காரணமாக பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நான் நேரடியாக பிரச்சாரத்துக்குச் சென்றால் அதனை கடைபிடிப்பதில் பல இடையூறுகள் ஏற்படும். அதனால்தான் காணொலிக் காட்சி மூலமாக பிரச்சாரத்தை மேற்கொண்டேன். வெற்றி பெற்ற பிறகு தொடர்ந்து மக்களைச் சந்திப்பேன். சென்னை மாநகராட்சி மேயர் பதவியேற்பில் பங்கேற்பது குறித்து முடிவுசெய்வேன் என்றார்.

# ஆளுங்கட்சி செயற்கை வெற்றி பெற்றுள்ளது: உள்ளாட்சித் தேர்தல் முடிவு குறித்து அதிமுக கருத்து

சென்னை , பிப். 23:

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் ஆளுங்கட்சி செயற்கையான வெற்றியை பெற்றுள்ளதாகவும் நேர்மையாக தேர்தல் நடத்தப்பட்டு இருந்தால் அதிமுக வெற்றிபெற்று இருக்கும் என்றும் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதில், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகளையும் திமுக கைப்பற்றவுள்ளது. இந்நிலையில், உள்ளாட்சித் தேர்தல் முடிவு தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், ஆளுங்கட்சி செயற்கையான வெற்றியை பெற்று இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்த ஒன்றுதான். இதன்மூலம் ஆளுங்கட்சி செயற்கையான வெற்றியை பெற்று இருக்கிறது. இந்த தேர்தல் நூறு விழுக்காட்சி சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடைபெற்றிருந்தால் அதிமுக மகத்தான வெற்றியை பெற்றிருக்கும்.

ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. நடந்து முடிந்த தேர்தல் என்பது முழுமையான மக்கள் எண்ணத்தின் பிரதிபலிப்பு அல்ல. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப மக்களின் தீர்ப்பிற்கு அதிமுக தலை வணங்குகிறது. அதிமுக மற்றும் அதன் தோழமை கட்சிகளுக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிமுக இதற்கு முன்புகூட பல தோல்விகளை சந்தித்தாலும் அவற்றில் இருந்து மீண்டு வந்து மகத்தான வெற்றிகளை படைத்து இருக்கிறது. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் - தர்மமே மறுபடியும் வெல்லும் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் மக்களின் உண்மையான மன நிலையையும் விருப்பத்தையும் வெளிப்படுத்துவதற்கான ஜனநாயகரீதியான வாய்ப்பு விரைவில் அமையும். அந்த நன்னாள் வரும்போது மக்கள் சக்தி வெல்லும். அதிமுக மீண்டும் வெற்றி பெறும் என்று தெரிவித்துள்ளார்.







# நகர்புற உள்ளாட்சி தேர்தலில் புதுக்கோட்டை நகராட்சியை கைப்பற்றிய திமுக, அன்னவாசல் பேரூராட்சியை எதிர்பார்த்தது போல் கோட்டைவிட்டது






புதுக்கோட்டை,பிப்.23:

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 8 பேரூராட்சிகள், 2 நகராட்சிகளில். 2 நகராட்சிகள், 7 பேரூராட்சிகளை கைப்பற்றியது திமுக. அதிமுக கோட்டை என சொல்லப்படும் விராலிமலை சட்டமன்றத் தொகுதி அன்னவாசலில் எதிர்பார்த்ததைபோல் அன்னவாசல் பேரூராட்சியை திமுக கைப்பற்ற முடியாமல் போனது.

கடந்த 19ம் தேதி நடைப்பெற்று முடிந்த நகர்புற உள்ளாட்சிதேர்தலுக்கான வாக்குகள் எண்ணிக்கையானது நேற்று நடைப்பெற்றது. அதன்படி புதுக்கோட்டை நகராட்சியின் 42 வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவுகள் நேற்று காலையில் இருந்தே அறிவிக்கப்பட்டு மாலை 3மணிக்குள் அனைத்து முடிவுகளும் தெள்ளத்தெளிவாக தெரிவிக்கப்பட்டன. அதில் திமுக கூட்டனி 28 இடங்களில் வெற்றி பெற்று புதுக்கோட்டை நகராட்சியை கைப்பற்றியுள்ளது.

திமுக 25, காங்கிரஸ் 3, அதிமுக 7, அமமுக 1, சுயேட்சை 6 என 42 இடங்களுக்கும் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. வார்டு எண், வெற்றி பெற்றவர்கள், கட்சி ஆகியவை பின்வருமாறு: 1.பழனிவேல் சுயேட்சை, 2.மதியழகன் திமுக, 3.கார்த்திகை செல்வி திமுக, 4.பர்வேஸ் சுயேட்சை, 5.அடைக்கலம் சுயேட்சை,6. சத்யா மாரிமுத்து அதிமுக,7. ராஜாத்தி நைனா முகமது திமுக, 8.அனுராதா அறிவுடைநம்பி திமுக, 9.செந்தாமரை பாலு திமுக,10.பால்ராஜ் திமுக, 11.அன்புமேரி முத்தாள் அமமுக, 12.செந்திமதி அய்யப்பன் அதிமுக, 13.அமுதா காங்கிரஸ், 14.காந்திமதி திமுக,15. காசிலிங்கம் திமுக,16. எஸ்எஸ் சேட் அதிமுக,17. லியாகத் அலி திமுக, 18.பாரதி சின்னையா அதிமுக, 19.ராஜேஸ்வரி காங்கிரஸ், 20.கனகம்மன் பாபு திமுக, 21.மெஹர்பானு நிஜாம் திமுக, 22.இராஜேந்திரன் திமுக, 23.குமரகுருபரன் சுயேட்சை, 24.அனுஹரினா சுயேட்சை, 25.திலகவதி செந்தில் திமுக, 26.லதா கருணாநிதி திமுக, 27. கார்த்திக் மெஸ் மூர்த்தி சுயேட்சை, 28.எட்வர்டு சந்தோஷநாதன் திமுக, 29.சுப.சரவணன் திமுக, 30.லதா ராமலிங்கம் திமுக, 31.சுமதி அதிமுக, 32. ஜெயா அதிமுக, 33.இராஜேஸ்வரி திமுக, 34.ராஜா முகமது காங்கிரஸ், 35.ஜாகீர்உசேன் திமுக, 36.வளர்மதி சாத்தையா திமுக, 37. தெய்வானை திமுக, 38.காதர்கனி திமுக, 39.இராஜேஸ்வரி திமுக, 40.செந்தில்குமார் அதிமுக, 41.கேஆர்ஜி பாண்டியன் அதிமுக,42. கவிவேந்தன் திமுக

இதேபோல் அறந்தாங்கி நகராட்சியையும் திமுக கைப்பற்றியது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அன்னவாசல், இலுப்பூர், கீரமங்கலம், ஆலங்குடி, கறம்பக்குடி, பொன்னமராவதி, கீரனூர், அரிமளம், ஆகிய எட்டு பேரூராட்சிகளில் அன்னவாசல் தவிர மற்ற 7 பேரூராட்சிகளையும் திமுக கைப்பற்றியது. ஏற்கனவே அன்னவாசல் யூனியனை கோட்டை விட்டது போல் தற்போதைய தேர்தலில் அன்னவாசல் பேரூராட்சி யையும் கைவிட்டுவிட்டது திமுக. மொத்தமுள்ள 15 வார்டுகளில் திமுக 5 இடங்களையும் சுயேட்சை ஒரு இடத்தையும் பெற்றுள்ளது. அதிமுக கூட்டணியில் அதிமுக 8 இடங்களையும், சுயேட்சை ஒரு இடத்தையும் பிடித்து பேரூராட்சியை தன்வசம் ஆக்கிக் கொண்டுள்ளது. விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் பேரூராட்சியைக் கைப்பற்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கர் விதைத்த விதை பலன் கொடுத்துள்ளதாக கூறும் திமுகவினர் இரண்டு அமைச்சர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்தும் அன்னவாசல் பேரூராட்சியில் கவனம் செலுத்தவில்லை என்று குமுறுகின்றனர்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்










| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,762 | Rs.5,128 |

## வரலாற்றில் இன்று

1917 சென் பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதன் மூலம் பெப்ரவரிப் புரட்சி ஆரம்பமானது. (கிரெகொரியின் நாட்காட்டியில் மார்ச் 8).

1927 செருமானிய கோட்பாட்டு இயற்பியலாளர் வெர்னர் ஐசன்பர்க் தனது அறுதியின்மைக் கொள்கை பற்றி முதற் தடவையாக வெளியிட்டார்.

1934 மூன்றாம் லியோபோல்ட் பெல்சியத்தின் மன்னராக முடிசூடினார்.

1941 புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டுப் பிரித்தெடுக்கப்பட்டது.

1942 இரண்டாம் உலகப் போர்: சப்பானிய நீர்மூழ்கிகள் கலிபோர்னியாவின் சான்டா பார்பரா கரையோரப் பகுதிகளில் எரிகணைகளை ஏவின.

1943 அயர்லாந்தில் கவன் மாவட்டத்தில் புனித யோசேப்பு அனாதை மடம் தீப்பற்றியதில் 35 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

1944 சோவியத் ஒன்றியம் செச்சினிய மற்றும் இங்குசேத்திய மக்களை வடக்கு காக்கேசியாவில் இருந்து மத்திய ஆசியாவுக்குக் கட்டாயமாக நாடு கடத்த ஆரம்பித்தது.

1945 இரண்டாம் உலகப் போர்: போசுனான் நகரம் சோவியத், போலந்து படையினரால் விடுவிக்கப்பட்டது.

1945 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சின் தலைநகர் மணிலா அமெரிக்கப் படைகளினால் சப்பானியரிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.

1947 சீர்தரத்துக்கான அனைத்துலக நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

1954 போலியோவிற்கு எதிரான சால்க் தடுப்பு மருந்து ஏற்றும் திட்டம் பிட்ஸ்பர்க், பென்சில்வேனியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

1966 சிரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப்பட்டது.

1987 சுப்பர்நோவா "1987ஏ" தென்பட்டது.

1991 தாய்லாந்தில் இராணுவத் தலைவர் சுந்தொங் கொங்சொம்பொங் தலைமையில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் பிரதமர் சட்டிச்சாய் சூன்ஹாவென் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

1997 உருசியாவின் மீர் விண்வெளி நிலையத்தில் தீவிபத்து ஏற்பட்டது.

1998 மத்திய புளோரிடாவில் இடம்பெற்ற சுழற்காற்றில் 42 பேர் உயிரிழந்தனர்.

1999 குர்தியக் கிளர்ச்சித் தலைவர் அப்துல்லா ஒசுலான் துருக்கியின் அங்காரா நகரில் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டார்.

### திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்தில்

# மூங்கில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி துணைவேந்தர் துவக்கி வைத்தார்

*அரியலூர் பிப். 23–*

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகவளாகத்தில், மூங்கில்மரக்கன்றுகள்நடும் திட்டத்தை, பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வம் துவக்கிவைத்தார்.




இதுபற்றி திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினரும், தத்தனூர் எம்ஆர் கல்வி நிறுவனங்களின் தாளாளருமான, எம்.ஆர். ரகுநாதன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது,

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் வழிகாட்டுதலின்படி, பாரதிதாசன் பல்கலைக்கழக யூத் ரெட் கிராஸ் மண்டலம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும், எம்.ஆர் கல்வி நிறுவனங்களின் செயலாளருமான எம்.ஆர். இரகுநாதன் சார்பில், 500 மூங்கில் மரக்கன்றுகளை பாரதிதாசன் பல்கலைக்கழக யூத் ரெட் கிராஸ் மண்டலத்திற்கு வழங்கப்பட்டது.

இந்த மரக்கன்றுகள் பாரதிதாசன்பல்கலைக்கழக துணைவேந்தர்பேராசிரியர். எம்.செல்வம்தலைமையில், பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் நடப்பட்டன.

இந்நிகழ்வில், பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர் பேராசியர் கணேசன், தேர்வு நெறியாளர் பேராசிரியர் சீனிவாச ராகவன், ஆட்சிக்குழு உறுப்பினர் எம்.ஆர். இரகுநாதன், பாரதிதாசன் பல்கலைக்கழக யூத் ரெட் கிராஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் வெற்றிவேல் மற்றும், தேசிய மாணவர் படையின் பெண்கள் பிரிவு அலுவலர் ஸ்ரீநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் யூத் ரெட் கிராஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் வெற்றிவேல்ஏற்பாடுசெய்து சிறப்புறஒருங்கிணைத்தார். மேலும் பாரதிதாசன் பல்கலைக்கழக யூத் ரெட் கிராஸ் மண்டலத்திற்கு மரக்கன்றுகளை வழங்க விருப்பம் உள்ளவர்கள், தாராளமாக முன்வந்து மரக்கன்றுகளை வழங்கலாம் என, யூத் ரெட் கிராஸ் மண்டலம் சார்பாக கேட்டுக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தென்காசி மாவட்டம், புளியங்குடியில் 33 வார்டு உறுப்பினர்களைக் கொண்ட நகராட்சியில் நேற்று முடிவு அறிவிக்கப்பட்டு, திமுக 14 இடங்களையும் அதிமுக 3, மதிமுக 1, காங்கிரஸ் 1, சுயேச்சை 6 ,இந்திய முஸ்லிம் லீக் 3, மமக2 ,பிஜேபி 1, சிபிஐ 1 , சமக1 ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். இதில் நான்காவது வார்டு உறுப்பினர் அந்தோணிசாமி வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் அதிகாரியிடம் பெற்றபோது எடுத்த படம்.

# கீழப்பனையூர் காமாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா– சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பங்கேற்பு





*அரிமளம் பிப். 23–*

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியம் கீழப்பனையூர் ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகவிழா நடைபெற்றது, இவ்விழா கடந்தபதினெட்டாம்தேதி வெள்ளிக்கிழமை காலை கணபதி ஹோமத்துடன் தொடங்கி மாலை முதல் கால யாக பூஜையும், சனிக்கிழமை காலை இரண்டாம் கால யாக பூஜையும்மாலைமூன்றாம் கால யாக பூஜையும் ஞாயிற்றுக்கிழமை காலை நான்காம் கால யாக பூஜையும்செய்யப்பட்டது.

பின்னர் கும்பாபிஷேக விழாவில் ரவி குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் யாகசாலையில் இருந்து புனிதநீரைஎடுத்துச்சென்று கோயில் கோபுரத்தில் உள்ள கலசத்தில் சரியாக 11 மணி அளவில் புனித நீர் ஊற்றப்பட்டுதீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி , எஸ்பி நிஷா பார்த்திபன் ஆகியோர் கலந்துகொண்டு அம்மனை தரிசித்தனர் இதனைத்தொடர்ந்து கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்ட பத்தாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

இரவு 10 மணி அளவில் கோவில் அருகில் உள்ள குளத்தில் தெப்ப தேர் பவனிவர இரவு ஒரு மணி அளவில் யானை வாகனத்தில் காமாட்சி அம்மன் திருவீதி உலாவும் நடைபெற்றது, இதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகி எம். எஸ் .எம் சோமு மற்றும் கோவில் பூசாரிகள் செய்திருந்தனர். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொன்னமராவதி டி.எஸ்.பி அப்துல் ரஹ்மான் தலைமையில், அரிமளம் காவல் உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் அனைத்து காவலர்களும் செய்திருந்தனர்.






# வேலூர் மாநகராட்சியில் திருநங்கை வெற்றி



*வேலூர், பிப்.23–*

வேலூர் மாநகராட்சியில் மொத்தம் உள்ள 60 வார்டுகளுக்கு கடந்த பிப்ரவரி 19ம் தேதி நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட்டது. இதில் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல், தி.மு.க. உறுப்பினராக இருந்து வரும் திருநங்கை கங்கா நாயக், இத்தேர்தலில் தி,மு.க. கட்சி சார்பாக 37 வது வார்டில் போட்டியிட்டார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையில் திருநங்கைகங்கா நாயக் 2131 வாக்குகள் பெற்று 15 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். வெற்றி பெற்ற அவரை சக திருநங்கைகள் ஆரத்தழுவி மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்தனர்.

### புதுக்கோட்டை கைக்குறிச்சி

# வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் வளாக நேர்காணல்



**புதுக்கோட்டை பிப்.23–**

புதுக்கோட்டை கைக்குறிச்சி வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் வளாக நேர்காணல்நடைபெற்றது. இந்த நேர்காணலில் மும்பை போஸ்டன் ஐ.டி கம்பெனி, நிறுவனத்தின் சார்பாக ஹெச்.ஆர் கீதன் தேசாய் நேர்காணலில் கலந்துகொண்டு மாணவர்களை தேர்வு செய்தார். இந்த நேர்காணல் மூலம் 24 மாணவர்கள் வருடம் ரூ.5 லட்சம் ஊதியத்தில் வேலைக்கு தேர்வாகினர். நேர்காணலில் சிறப்பாக செயல்பட்டு பணி நியமன ஆணை பெற்ற மாணவர்களை கல்லூரி நிர்வாகத்தினர், முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

நேர்காணலில் வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரி மாணவி ஆ.தனலெட்சுமி (மின்னியல்துறை) க்கு மும்பை போஸ்டன் ஐ.டி கம்பெனி, நிறுவனத்தின் ஹெச்.ஆர் கீதன் தேசாய், பணி நியமன ஆணையை வழங்கினர்.






# இல்லம் தேடி கல்வி மையத்தில் பாகுபாடு காட்டக்கூடாது– அன்னவாசல் வட்டாரக் கல்வி அலுவலர்

**புதுக்கோட்டை, பிப்.23–**

இல்லம் தேடி கல்வி மையத்திற்கு கல்வி கற்க வரும் மாணவர்களிடம் தன்னார்வலர்கள் பாகுபாடு காட்டக் கூடாதுஎன அன்னவாசல் வட்டாரக்கல்வி அலுவலர் அலெக்ஸாண்டர் பேசினார்.



புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி .சத்தியமூர்த்தி வழிகாட்டுதலின்படி அன்னவாசல் ஒன்றியத்தில்இல்லம்தேடி கல்வி தொடக்க நிலை தன்னார்வலர்களுக்கான பயிற்சி அன்னவாசல் வட்டார வள மையத்தில் நேற்று நடைபெற்றது.

பயிற்சியினை அன்னவாசல் வட்டாரக் கல்விஅலுவலர்அலெக்ஸாண்டர் தொடங்கி வைத்தார். மேலும் பயிற்சியில் அன்னவாசல் வட்டாரக்கல்விஅலுவலர் கலா,வட்டார வள மைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி( பொறுப்பு) இல்லம் தேடி கல்வி திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இப்பயிற்சியில் தொடக்க நிலை வகுப்புகளை கையாள உள்ள 40 தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களை எளிமையாக வாசிப்பது மற்றும் எழுதுவது, எளிய கணித செயல்பாடுகளை செய்யும்வழிமுறைகள்,எளிய பரிசோதனை மூலமாக அறிவியல்செயல்பாடுகளை செய்யும் வழிமுறைகள் குறித்து வட்டார வளமைய பயிற்றுநர்கள் ஜோசப் ரொசாரியோ கில்பர்ட், விஜயகுமார், மனோகரன்,கவிதா மற்றும் ஆசிரியர்கள் எழுவன் சீனிவாசன், செந்தில், ஆனந்தராஜ் ஆகியோர் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளித்தனர்

# திருவாரூர் நகராட்சி தேர்தலில் கணவன் மனைவி இருவருமே வெற்றி

*திருவாரூர், பிப்.23–*

திருவாரூர் நகராட்சி தேர்தலில் 30 வார்டு பதவிக்கான தேர்தல் பிப்ரவரி 19-ந் தேதி (சனிக்கிழமை) நடைபெற்றது. இந்த தேர்தலில் நகராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கு அ.தி.மு.க.வி சார்பில் தம்பதியினர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதில் 1-வது வார்டு பதவிக்கு எஸ்.கலியபெருமாள் வேட்பு மனு தாக்கல் செய்தார். இவர் அ.தி.மு.க. இளைஞர், இளம் பெண்கள் பாசறை மாவட்ட தலைவர் மற்றும் திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவராக பதவி வகித்து வருகிறார்.



இவருடைய மனைவி மலர்விழி கலியபெருமாள், நகராட்சி 2-வது வார்டில் போட்டியிட்டார். இவர், கடந்த 24 ஆண்டுகளாக அ.தி.மு.க.வில் பணியாற்றி வருகிறார். ஏற்கனவே ஒரு முறை நகர் மன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

திருவாரூர் நகராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கு அ.தி.மு.க சார்பில் போட்டியிட தம்பதியினர் வேட்பு மனு தாக்கல் செய்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ள நிலையில் தற்போது இருவரும் வெற்றி பெற்றுள்ளனர். இதையடுத்து வெற்றி பெற்ற தம்பதியை கிராம மக்கள் தூக்கி வைத்து கொண்டாடி வருகின்றனர்.

# தேனி அருகே 2 கார் மற்றும் வேன் ஒன்றோடொன்று மோதிய கோர விபத்து

## 4 பேர் உயிரிழப்பு,10 பேர் படுகாயம்

தேனி பிப்.23–

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே நடந்த கோர விபத்தில் நால்வர் உயிரிழந்த நிலையில், படுகாயங்களுடன் 10க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.





மதுரை மாவட்டம் செக்கானூரணியைச் சேர்ந்தவர் சிவபாண்டி (வயது 48), செல்வம் (55), பாண்டியராஜன் (44). இவர்கள் தேனி மாவட்டம் கம்பத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்பு காரில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஆண்டிப்பட்டி கணவாய், திம்மரசநாயக்கனூர் விலக்கு அருகே வந்தபோது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே வந்த கார் மீது மோதியதோடு கேரளாவில் இருந்து சுற்றுலா வந்த வேன் மீதும் பயங்கரமாக மோதியது.

இதில் காரை ஓட்டி வந்த நாகமலைப் புதுக்கோட்டையைச் சேர்ந்த முருகபிரபு (44), மதுரை மாவட்டம் செக்கானூரணியைச் சேர்ந்த சிவபாண்டி (48), செல்வம் (55) , மற்றொரு காரை ஓட்டி வந்த பிச்சம்பட்டியைச் சேர்ந்த ராமச்சந்திரன் (35) ஆகிய 4 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்த ஆண்டிப்பட்டி போலீசார் மற்றும் தீயணைப்பு படைவீரர்கள் நிகழ்விடம் வந்து விபத்தில் சிக்கியவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து படுகாயங்களுடன் 10க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவர்களில் சிலர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

# தமிழை பிழையின்றி கற்பவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளது பேரா. விஸ்வநாதன்



புதுக்கோட்டை, பிப்.23-
தாய்மொழியான தமிழைக்கற்பதால்வேலை கிடைக்காது என்றமாயை உருவாக்கப்பட்டிருக்கிறது. பொன்மாரி கல்வியியல் கல்லூரியில் "உலக தாய்மொழி தினம்" கொண்டாட்டத்தில் பங்கேற்ற புதுக்கோட்டை வாசகர் பேரவை செயலர் பேரா.சா.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் பொம்மாடிமலை, பொன்மாரி கல்வியியல் கல்லூரியில் "உலக தாய்மொழி தினம்" கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குபொன்மாரி கல்வி நிறுவனங்களின் மேலாண்மை இயக்குனர் அ.லெ.சொக்கலிங்கம் தலைமை வகித்து தாய்மொழியை கற்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார். விழாவில் சிறப்புரை ஆற்றிய, புதுக்கோட்டை வாசகர் பேரவை செயலர் பேரா.சா.விஸ்வநாதன், தனது உரையில். உலக தாய் மொழி தினம், 1952ஆம் ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள், இன்றைய வங்காளதேசத்தின் (அன்றைய கிழக்கு பாகிஸ்தான்) தலைநகர் டாக்காவில், வங்கமொழிக்கு ஆதரவாக போராட்டம் நடத்திய டாக்கா பல்கலைகழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 4 மாணவர்கள் மற்றும் 9 வயது சிறுவன் ஒருவனும் கொல்லப்பட்டனர். அந்த நாளை நினைவு கூறும் விதமாகவே உலக தாய் மொழி தினம் கொண்டாடப்படுகிறது.

தாய்மொழியான தமிழைக்கற்பதால்வேலை கிடைக்காது என்றமாயை உருவாக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையல்ல. தமிழை பிழையின்றி கற்பவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளது. ஆகவே எதிர்காலத்தில் ஆசிரியராகப் போகும் நீங்கள் மொழியை சிறப்பாகக் கற்றுக்கொண்டுவருங்கால சந்ததிக்கு மொழியையும், பண்பாட்டையும் கொண்டுபோகவேண்டிய கடமை இருக்கிறது. தாய்மொழியாம் தமிழ்மொழியை நேசிப்பது, தமிழ் இனத்தை, பண்பாட்டை, நேசிப்பதாகும். இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் நம் தமிழ்மொழி, செம்மொழியாக நிலைத்திருக்க இந்த உலக தாய்மொழி தினத்தில் உறுதிஎடுப்போம்என்றார்.

முன்னதாக பொன்மாரி கல்வி நிறுவனங்களின் செயலர் மு.ராமக்கண்ணு, அறங்காவலர் ப.லட்சுமணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி முதல்வர் செ.இராஜலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். நிறைவாக உதவிப் பேராசிரியர் ப.சந்திரசேகர் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியை உதவிப் பேராசிரியர் கா.மாரிமுத்து தொகுத்து வழங்கினார். விழாவில் ஏராளமான ஆசிரிய பயிற்சி மாணவர்கள் பங்கேற்றனர்.

# தி.மலை மாவட்டம் செங்கம் பேரூராட்சியில் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்



தி.மலை, பிப்.23-
திருவண்ணாமலை மாவட்டம் அடுத்த செங்கம் பேரூராட்சியில் உள்ளாட்சித் தேர்தலில் 18 வார்டுகளில் திமுக-8 வேட்பாளர்களும், அதிமுக-7 வேட்பாளர்களும், பாஜக-1 வேட்பாளரும், மனிதநேய மக்கள் கட்சி-1 வேட்பாளரும், பமக-1 வேட்பாளரும் வெற்றி பெற்றுள்ளனர்.

போளூர் பேரூராட்சியில் 18 வார்டுகளில் திமுக 12 வேட்பாளர்களும், காங்கிரஸ்-2 வேட்பாளரும், அதிமுக-2 வேட்பாளரும், பாமக-1 வேட்பாளரும், சுயேச்சை-1வேட்பாளரும் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். சேத்துப்பட்டு பேரூராட்சியில் 18-வார்டுகளில் திமுக-10 வேட்பாளர்களும், அதிமுக-2 வேட்பாளர்களும், காங்கிரஸ்-2 வேட்பாளரும்,பாமக-1 வேட்பாளரும்,சுயச்சை-4 வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆரணி நகராட்சியில் 33 வார்டுகளில் திமுக-12 வேட்பாளர்களும், அதிமுக-15 வேட்பாளர்களும், காங்கிரஸ்-2 வேட்பாளரும் மதிமுக-2 வேட்பாளரும் விசிக-1 வேட்பாளரும், சுயேச்சை-1 வேட்பாளர் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். கண்ணமங்கலம் பேரூராட்சி 15 வார்டுகளில் திமுக-10 வேட்பாளர்களும், அதிமுக-2 வேட்பாளரும், பாமக-1 வேட்பாளரும், விசிக-1 வேட்பாளரும், காங்கிரஸ்-1 வேட்பாளரும் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

திருவண்ணாமலை நகராட்சியில் 39 வார்டுகளில் திமுக-29 வேட்பாளர்களும், மனிதநேய மக்கள் கட்சி-1 வேட்பாளரும், மதிமுக-1 வேட்பாளரும், அதிமுக-6 வேட்பாளர்களும், சுயேச்சை-2 வேட்பாளரும் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

திருவத்திபுரம் நகராட்சியில் 27 வார்டுகளில் திமுக-18 வேட்பாளர்களும், காங்கிரஸ்-1 வேட்பாளரும், அதிமுக-3 வேட்பாளரும், பாமக-2 வேட்பாளரும், சுயேச்சை-3 வேட்பாளரும் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

### எடப்பாடி பழனிசாமி தொகுதி 23வது வார்டில்

# 1,359 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் சிவகாமி வெற்றி பெற்றுள்ளார்

சேலம், பிப்.23-
சேலம் மாவட்டத்தில் 1 மாநகராட்சி, 6 நகராட்சிகள், 31 பேரூராட்சிகளுக்கு கடந்த பிப்ரவரி 19ம் தேதி தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் பதிவான வாக்குகள் 16மையங்களில் நேற்று காலை 8 மணி முதல் பலத்த பாதுகாப்புடன் எண்ணப்பட்டது.

அதிமுகவின் கோட்டையாக கருதப்படும் சேலம், கோவை உள்ளிட்ட இடங்களிலும் திமுக கூட்டணி அதிக இடங்களில் முன்னிலை பெற்றது. இந்நிலையில் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட எடப்பாடி பழனிசாமி வீடு அமைந்துள்ள 23வது வார்டில் திமுக வேட்பாளர் சிவகாமி அறிவழகன் வெற்றி பெற்றுள்ளார். இதனால் அந்த வார்டில் உள்ள அதிமுகவினர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி இல்லம் உள்ள நெடுஞ்சாலை நகர் பகுதியான 23வது வார்டில் 1,359 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் சிவகாமி வெற்றி பெற்றுள்ளார்.








▶ சென்னை மாநகராட்சியின் தேர்தலில் ராயபுரம் தொகுதி 49 வது வார்டில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் இளைய அருணாவுக்கு பாஜ வேட்பாளர் வன்னியராஜன் கை கொடுத்து வாழ்த்துகள் தெரிவித்தார்.



▶ திருவள்ளூர் நகராட்சி நகர்ப்புறத்தில் 24 வது வார்டில் சுயேட்சை வேட்பாளர் செந்தில்குமார் வெற்றி



▶ திருவள்ளூர் நகராட்சி நகர்ப்புற தேர்தலில் 11வது வார்டு காங்கிரஸ் வேட்பாளர் ஜான் வெற்றி

# திருக்கண்ணபுரத்தில் 55 ஆண்டு காலமாக அன்னதான சேவை ரோட்டரி சங்கத்திற்கு பாராட்டு



நாகப்பட்டினம், பிப்.23-
திருக்கண்ணபுரத்தில் 55 ஆண்டுகாலமாக பரகாலராமானுஜ கூடம், திருமங்கை ஆழ்வார் சபையால் நடத்தப்படும் ததியாராதனை கைங்கர்யத்திற்கு (அன்னதானம்) காரைக்கால் ரோட்டரி சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் நே.கணகபூசனம் தலைமையில் ரோட்டரி சங்க நிறுவனர் கலியபெருமாள், முன்னாள் தலைவர் ரவி, குணபாலன், சியாமளா, திட்டத் தலைவர் சோசி முன்னிலையில் பரகாலராமானுஜ கூடநிர்வாகி பசுவஞ்சிங் என்கிற குலசேகர ராமானுஜதாசரால் வழங்கப்பட்டது.

அன்னதான சேவையை பாராட்டி ரோட்டரி சங்கத்திற்கு நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. ரோட்டரி சங்க நிர்வாகிகளுக்கு திருமங்கை ஆழ்வார் சபையின் மூலமாக நன்றி தெரிவிக்கப்பட்டது.






# செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சி வார்டில் வெற்றி கவுன்சிலர் வேட்பாளர்

சென்னை, பிப்.23-
செங்குன்றம் நகரம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சியில் வார்டு கவுன்சிலர் வெற்றி வேட்பாளர் 1வது வார்டு பபிதா பால்ராஜ், திமுக, 2வது வார்டு லதா கணேசன், திமுக, 3 வது வார்டு என்.சகாதேவன், திமுக, 4 வது வார்டு கார்த்திக் கோடீஸ்வரன், திமுக, 5 வது வார்டு தெய்வானை கபிலன் திமுக, 6வது வார்டு லீலாவதி சாந்தகுமார் (கை), காங்கிரஸ், 7வது வார்டு கே.ஆர்.ரமேஷ் (சுயேட்சை), 8வது வார்டு வினோதினி (சுயேட்சை), 9வது வார்டு அமுதா ஆசைத்தம்பி (அதிமுக), 10வது வார்டு பா.கோமதி (சுயேட்சை), 11வது வார்டு விப்ர நாராயணன் (திமுக), 12 வது வார்டு ஸ்ரீதேவி (சுயேட்சை), 13வது வார்டு ஆர்.டி.குமார் (திமுக), 14 வது வார்டு கா.கு. இலக்கியன் (சுயேட்சை) 15வது வார்டு கலைவாணி பாபு (திமுக) 16வது வார்டு ராதாகிருஷ்ணன் (அதிமுக) 17வது வார்டு என்எம்.டி. இளங்கோவன் (திமுக), 18 வது வார்டு கே.கே ராமன் (திமுக) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

# உலகம் முழுவதும் சர்வதேச உலக தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது



சென்னை, பிப்.23-
சென்னை ஆதியப்பா தெருவில்உள்ளகன்னியகா பரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி வளாகத்தில் சர்வதேச உலக தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது.

உலகத் தாய்மொழி நாளில், தங்கள் மொழிகளைப் பாதுகாக்கவும் உரிமைகளை நிலைநாட்டவும் போராடிய தியாகியருக்கு ஆசிரியர்கள், கல்லூரி மாணவியர்கள், பள்ளி மாணவர்கள் வணக்கத்தை செலுத்தினர்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக வருகைதந்த கே.அனில் குமார் ரெட்டி, தெலுங்கு மகாஜன சமாஜம், வேணுகோபால் வித்யாலயம் சென்னை ஆகியோர்தலைமையேற்றும் துருவதாரா விருது நிர்மலா பழனிவேலு எம்.ஏ.பி.எச்.டி தெலுங்கின் முன்னாள் எச்.ஓ.டி பாரதி மகளிர் கல்லூரி துருவதாரா விருதுகள் வழங்கியும்,தலைவர் ஜனன் சங்கிக சம்ஸ்கிருதிகா சமிதி சென்னை டி.ஆர். எஸ்.சர்மா, சென்னை பெரம்பூர் தெலுங்கு சாகித்ய சமிதி செயலாளர் அபினா விருது வழங்கியும் சுஜாதா கோதா, பவர் மேனேஜ்மென்ட் கன்சல்டிங் இயக்குனர் மற்றும் யோகா சித்தியின் நிறுவனருக்கு உத்பவ விருதுகள் வழங்கி கௌரவிக்கபட்டது.

இந்நிகழ்வில் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையும் வழங்கபட்டது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் டீ.மோகனஸ்ரீ கல்லூரி நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் பலர் பங்குகொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தை திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் பெருவாரியான இடங்கள் கைப்பற்றியது






மயிலாடுதுறை, பிப்- 23;
மயிலாடுதுறை மாவட்டத்தில் 2 நகராட்சிகள் 4 பேரூராட்சி களை திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கைப்பற்றியது. நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் வாக்கு எண்ணிக்கைகள் மயிலாடுதுறை சீர்காழி பகுதிகளில் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கையின் இறுதியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை மற்றும் சீர்காழி பேரூராட்சிகளில் 84 இடங்களில் திமுக மற்றும் கூட்டணி கைப்பற்றியது.

குத்தாலம் பேரூராட்சியில் 11 இடங்களும், மணல்மேடு பேரூராட்சியில் 10 இடங்களும், வைத்தீஸ்வரன்கோவிலில் 10 இடங்களையும் திமுக கைப்பற்றியது.

தரங்கம்பாடி பேரூராட்சி 15-வார்டுகளையும் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் கைப்பற்றினர். தரங்கம்பாடி பேரூராட்சியில் வெற்றி வேட்பாளர்கள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் என அனைவரும் வானவேடிக்கை, பட்டாசுகள் வெடித்து, மேளதாளம் முழக்கத்துடன் ஊர்வலமாக நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வீட்டிற்கு வந்து அவருக்கு பொன்னாடை மற்றும் மாலை அணிவித்து வாழ்த்துக்களை பெற்றுச்சென்றனர்.

# திருக்கண்ணபுரம் சவுரிராஜபெருமாள் கோவிலில் தெப்ப உற்சவம் திரளான பக்தர்கள் சாமி தரிசனம்



நாகப்பட்டினம், பிப்.23-
நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருக்கண்ணபுரத்தில் சவுரிராஜ பெருமாள் கோயில் அமைந்துள்ளது.

இந்தக் கோவில் பற்றி ஆழ்வார்கள் பாடியுள்ளனர்.பல்வேறு சிறப்புகள் பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் மாசி மக பெருவிழா 15 நாட்கள் நடைபெறுவது வழக்கம்.அதன்படி இந்த ஆண்டிற்கான மாசி மகப்பெருவிழா கடந்த 8-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவையொட்டி தங்க பல்லாக்கு திருமேனி சேவை, தங்க கருட சேவை மற்றும் பல்வேறு வாகனங்களில் சாமி வீதி உலா நடைபெற்றது.

தொடர்ந்து தேரோட்டம், திருப்பட்டினம் கடற்கரையில் சமுத்திர தீர்த்தவாரி நிகழ்ச்சியும் நடந்தன. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தெப்ப உற்சவம்,நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. முன்னதாக காலை பெருமாள் திருமஞ்சனம் நடைபெற்றது. பின்னர்நாச்சியார்களுடன், சவுரிராஜப்பெருமாள், தெப்பத்தில் எழுந்தருளினார்.

கோவிலின் எதிரே அமைந்துள்ள நித்திய புஷ்பகரணி திருக்குளத்தில் மூன்று முறை நூதன பங்களாதெப்பம் என்ற தெப்பம் வலம் வந்தது. தெப்பத்தில் பக்தி பாடல் இன்னிசைநிகழ்ச்சி மற்றும் நாதஸ்வர இன்னிசையும் நடைபெற்றது.

தொடர்ந்துநடைபெற்ற தெப்ப உற்சவத்தில் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினரும், திருமருகல் ஒன்றியக்குழு தலைவருமான இரா. ராதாகிருட்டிணன், தக்கார் சீனிவாசன், செயல் அலுவலர் ராஜா, ஒன்றியக்குழு உறுப்பினர் அபிநயா அருண்குமார் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### 58 ஆண்டுகளுக்குப்பிறகு உளுந்தூர்பேட்டை

# நகராட்சித்தலைவர் பதவியை திமுக தனிப்பெரும்பான்மையுடன் கைப்பற்றுகிறது

கள்ளக்குறிச்சி, பிப்,23_

உளுந்தூர்பேட்டை நகராட்சியில் திமுக 16 வார்டுகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் உளுந்தூர் பேட்டைநகராட்சிதலைவர் பதவியை58ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக கைபற்றுகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள 24 வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் பதவிகளுக்கு நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி தேர்தலில் 19 வார்டுகளில் திமுகவினர்போட்டியிட்ட நிலையில், 16 வார்டுகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையில் உளுந்தூர்பேட்டை நகராட்சியை முதல் முறையாக கைப்பற்றுகிறது. திமுக கூட்டணி கட்சிகளான மதிமுக, விசிக, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி தலா ஒரு வார்டையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நான்கு வார்டுகளிலும் வெற்றி பெற்றது.

கடந்த 58 ஆண்டுகளாக பேரூராட்சியாக இருந்த பொழுது காங்கிரஸ், சுயேச்சை, அதிமுக மதிமுக உள்ளிட்டோர் பேரூராட்சி தலைவர் பதவி வகித்து வந்த நிலையில், தற்பொழுது உளுந்தூர்பேட்டை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு நடந்து முடிந்த நகராட்சித் தேர்தலில் 16- வார்டுகளில் வெற்றி பெற்று தலைவர் பதவியை திமுக தனிப்பெரும்பான்மையுடன் கைப்பற்றுகிறது. வெற்றி பெற்றவேட்பாளர்களுக்கு நகராட்சி ஆணையரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான சரவணன் சான்று வழங்கினார்.




## கறம்பக்குடி உள்ளாட்சி தேர்தலில் திமுக முன்னிலை பெற்று பேரூராட்சியை கைப்பற்றியது

கறம்பக்குடி பிப்.23-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பேரூராட்சியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் 15 வார்டுகளில் திமுக10வார்டுகளில்வெற்றி பெற்று பேரூராட்சியை கைப்பற்றியது. காங்கிரஸ் 1,அதிமுக 2,சுயேட்சைகள் 2 வார்டுகளிலும் வெற்றி பெற்றனர். பேரூராட்சி வார்டுகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம் பின்வருமாறு,

1 வது வார்டு கருப்பையா திமுக , 2 வது வார்டு முருகேஸ்வரி திமுக , 3 வது வார்டு செண்பகவள்ளி திமுக , 4 வதுவார்டுவளர்மதிதிமுக , 5 வது வார்டு ஜன்னத் பேகம் திமுக, 6 வது வார்டு பரக்கத் நிஷா திமுக , 7 வது வார்டு பிரிதிவிராஜா, 8 வது வார்டு முருகேசன் திமுக , 9 வது வார்டு ராஜா சுயேட்சை , 10 வது வார்டு மஞ்சுளாதேவி காங்கிரஸ், 11வது வார்டு பரிதா பேகம் திமுக, 12வது வார்டு நைனா முகமது திமுக, 13வது வார்டு ராஜசேகர் திமுக, 14வது வார்டு ரெங்கசாமி அதிமுக, 15வது வார்டு மங்கையர்கரசி அதிமுக ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

## அரியலூர் நகராட்சி தேர்தலில் திமுக அதிமுக சமபலம்

அரியலூர் பிப். 23-

அரியலூர் நகராட்சி கவுன்சிலர்கள் தேர்தலில், திமுக, அதிமுக கட்சிகள், சமபலத்தில்வென்றுள்ளன. அரியலூர் நகராட்சித் தலைவர் பதவியை அலங்கரிக்க போவது யார் என்கிற முடிவு, 4 சுயேட்சை கவுன்சிலர் கையில் உள்ளது.

அரியலூர் நகராட்சி, 18 வார்டு கவுன்சிலர் பதவிகளுக்கு நடைபெற்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை, அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அனைத்து வார்டுகளுக்கும் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், திமுக 7 இடங்களிலும், அதிமுக 7 இடங்களிலும், சுயேச்சைவேட்பாளர்கள்4 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர்.



அரியலூர்நகராட்சியில் வார்டு வாரியாக வெற்றி பெற்ற வேட்பாளர்கள் விபரம் வருமாறு:

1 வது வார்டு ஜேசு மேரி லினஸ் (சுயேச்சை),2 வது வார்டு செல்வராணி பரமேஸ்வரன் (திமுக), 3 வதுவார்டு சத்யன் (திமுக), 4 வது வார்டு கண்ணன் (அதிமுக),5 வது வார்டு சாந்தி கலைவாணன் (திமுக),6 வது வார்டு ரேவதி ராமு (திமுக), 7 வது வார்டு கலியமூர்த்தி (சுயேச்சை), 8 வது வார்டு ராஜேந்திரன் (அதிமுக),9 வது வார்டு மகாலட்சுமி கார்த்திகேயன் (அதிமுக), 10 வது வார்டு இன்பவல்லி மாரியப்பன் (அதிமுக),11 வது வார்டு முகமது இஸ்மாயில் (அதிமுக,) 12 வது வார்டு மலர்க்கொடி மனோகரன் (சுயேட்சை),13 வது வார்டு வெங்கடாஜலபதி (அதிமுக),14 வது வார்டு ஜெயந்தி குணா (திமுக), 15 வது வார்டு ராணி சந்திரசேகர் (திமுக),16 வது வார்டு ராஜேஷ் (திமுக), 17 வது வார்டு ஜீவா செந்தில் (அதிமுக),18 வது வார்டு புகழேந்தி (சுயேட்சை), அரியலூர் நகராட்சி வார்டு கவுன்சிலர் தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கான சான்றிதழ்களை,அரியலூர் நகராட்சி ஆணையர் தேர்தல் நடத்தும் அலுவலர்சித்ராசோனியா வழங்கினார். அருகில் நகராட்சி பொறியாளர் தமயந்தி, ஓவர்சியர் பிரசாத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




## ஒரு ஓட்டு கூட வாங்காத மநீம, அதிமுக வேட்பாளர்களால் போட்டியிட்டவர்களே அதிர்ச்சி

சிவகங்கை, பிப்.23-

சிவகங்கை நகராட்சியில் கடந்த பிப்ரவரி 19ம் தேதி நடைபெற்ற நகர்மன்ற தேர்தலில் மொத்தம் உள்ள 27வார்டுகளுக்கு 125 பேர் போட்டியிட்டனர்.

இந்நிலையில் சிவகங்கை நகராட்சியில் உள்ள 1 வது வார்டில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் வேட்பாளர் செங்கோல் ஒரு வாக்கு கூட பெறவில்லை.



வேட்பாளர் செங்கோல் ஓட்டு மற்றும் அவருடைய குடும்பத்தினர் ஓட்டு கூட அவருக்கு பதிவாகாமல் இருந்தது மிகப்பெரிய அதிசயம் தான் என்று அந்த பகுதி மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பேரூராட்சியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் 15 வார்டுகளில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர், அதில் 7 வது வார்டில் அதிமுக சார்பில் போட்டியிட்ட முகமது இப்ராம்ஷா ஒரு ஓட்டு கூட வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அறந்தாங்கியில் திமுக அமோக வெற்றி 17 இடங்களைப் பெற்று முன்னிலை

அறந்தாங்கி பிப்.23-

புதுக்கோட்டை மாவட்டம்அறந்தாங்கியில் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் 17 இடங்களை பிடித்து திமுக வெற்றி பெற்றுள்ளது.

அறந்தாங்கி நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன, இதில் கடந்த 19ம் தேதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அறந்தாங்கி அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று காலை 8 மணி முதல் வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. 7 சுற்றுகளாக நடைபெற்ற வாக்குஎண்ணும்பணியில் தொடர்ந்து திமுக முன்னிலைபெற்று வந்தது.

இதில் திமுக 17 இடங்களையும் அதிமுக 3 இடங்களையும், காங்கிரஸ் 3 இடங்களையும்,தேமுதிக 1இடத்தையும், சுயேட்சை 3 இடங்களும்பிடித்துவெற்றி பெற்றுள்ளன. வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அனைவருக்கும் வெற்றி சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலர் லீமாசைமன் வழங்கினார். எதிர்வருகின்ற நகர்மன்றத் தலைவருக்கான மறைமுகத்தேர்தலில் திமுக வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரிமளம் ஒன்றியம் ஓணாங்குடி ஊராட்சியில் மகளிர் திட்டம் மூலம் ஊட்டச்சத்து விழா

அரிமளம் பிப்.23-

அரிமளம் ஒன்றியம் ஓணாங்குடி ஊராட்சியில் மகளிர் திட்டம் மூலம் ஊட்டச்சத்து விழா நடைபெற்றது. இவ்விழாவில் அனைத்து மகளிர் சுயஉதவி குழுக்களும் கலந்து கொண்டனர், அக்குழுவினர் தயாரித்த உணவுகளில்இருந்துசிறந்த ஊட்டச்சத்து உணவினை தயார்செய்தகுழுக்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது.

இவ்விழாவில்ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஆர். முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி, மகளிர் திட்ட வட்டார இயக்க மேலாளர் பிரியா, ஒருங்கிணைப்பாளர் தனலெட்சுமி,



குழந்தைகள் வளர்ச்சி திட்ட மேற்பாவையாளர் வீரமணி, ஊராட்சி செயலாளர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# அடுத்த ஐந்து ஆண்டுகள் புதுக்கோட்டை நகர மக்களின் உரிமையை பாதுகாக்க போகிறவர்கள் இவர்களே




Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# நகர்ப்புற தேர்தலில் அனைத்து பதவிகளையும் அள்ளியது திமுக

# கறம்பக்குடியில் ஒரு ஓட்டு கூட வாங்காத அதிமுக வேட்பாளர் சிவகங்கையிலும் ஒரு கூத்து





# புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசலை கைகழுவியது திமுக


சென்னை / புதுக்கோட்டை | 23.02.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.5

புதுகை வரலாறு நாளிதழ்

புதுகை
வரலாற்றில் இன்று



# நினைவு நாள்

## ஜி. பூவராகவன்

தமிழக அரசியல்வாதி



(பி. 1927) (இ. 2014)

புதுகை
வரலாறு
நாளிதழ்

# நினைவு நாள்

## ஈ. வெ. கி. சம்பத்

தமிழக அரசியல்வாதி



(பி. 1826) (இ. 1977)

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.
தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்